ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

அதி விசேஷமானது

අංක 1937/25 - 2015 ඔක්තෝබර් මස 23 වැනි සිකුරාදා - 2015.10.23

1937/25 ஆம் இலக்கம் - 2015 ஆம் ஆண்டு ஒற்றோபர் மாதம் 23 ஆந் திகதி வெள்ளிக்கிழமை

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)

## பகுதி III - காணிகள்

### காணி கொள்வனவு பற்றிய அறிவித்தல்கள்

**1964 ஆம் ஆண்டின் 28 ஆம் இலக்க காணி எடுத்தற் (திருத்தச்) சட்டத்தினால் திருத்தப்பட்டவாறான காணி எடுத்தற் சட்டம் (அத்தியாயம் 460)**

7 ஆம் பிரிவின் கீழான அறிவித்தல்

எனது குறிப்பு இல.: ACQ/O/J/D/125.
காணி அமைச்சின் இல.: 4-3/4/2014/D/125.

ஒரு பகிரங்க தேவைக்கு வேண்டியதான கீழ்க்காணும் காணியை எடுத்துக்கொள்ள அரசாட்சியார் எண்ணியிருக் கிறார்கள் என்பதனை 1964 ஆம் ஆண்டின் 28 ஆம் இலக்க காணி எடுத்தல் (திருத்தச்) சட்டத்தினால் திருத்தப்பட்ட வாறான காணி எடுத்தற் சட்டத்தின் (அத்தியாயம் 460) 7 ஆம் பிரிவின் (1) ஆம் உட்பிரிவின் பிரகாரம் நான் இத்தால் அறிவிக்கின்றேன்.

**எடுத்துக்கொள்ளவிருக்கும் காணியின் விபரம்:-**

| | |
|---|---|
| ஆரம்ப வரைபட இல | : யா / 2814 |
| இட அமைவு கிராமம் | : தாவளை இயற்றாலை |
| கிராம அலுவலர் பிரிவு | : கொடிகாமம் வடக்கு J/326 |
| பிரதேச செயலாளர் பிரிவு | : தென்மராட்சி/ சாவகச்சேரி |
| மாவட்டம் | : யாழ்ப்பாணம் |
| மாகாணம் | : வட மாகாணம் |

**1. துண்டு இல. 1**

காணியின் பெயர்: பண்டாரத்தோட்டம்; விபரம்: இரண்டு நிரந்தரக் கட்டடமும், ஒரு பகுதி நிரந்தரக் கட்டடமும் கொண்ட தோட்டம்; உரிமையாளர் பெயர்: சிவபோசாரியார் சிவானி, மடத்தடி ஒழுங்கை, கொடிகாமம்; விஸ்தீரணம்: 0.8343 ஹெக்டயார்.

**2. துண்டு இல. 2**

காணியின் பெயர்: பண்டாரத்தோட்டம்; விபரம்: பாதையும், மூன்று பகுதி நிரந்தரக் கட்டடமும் கொண்ட; உரிமையாளர் பெயர்: தெரியாது; விஸ்தீரணம்: 0.0429 ஹெக்டயார்.

**3. துண்டு இல. 3**

காணியின் பெயர்: பண்டாரத்தோட்டம்; விபரம்: ஒரு பகுதி நிரந்தரக் கட்டடம் கொண்ட தோட்டம்; உரிமையாளர் பெயர்: செல்லையா சரவணமுத்து, கச்சாய் வீதி, கொடிகாமம்; விஸ்தீரணம்: 0.2099 ஹெக்டயார்.

**4. துண்டு இல. 4**

காணியின் பெயர்: பண்டாரத்தோட்டம்; விபரம்: ஒரு நிரந்தரக் கட்டடமும், மூன்று பகுதி நிரந்தரக் கட்டடமும், ஒரு கிணறும் கொண்ட தோட்டம்; உரிமையாளர் பெயர்: ஆறுமுகம் தியாகராஜா, பருத்திதுறை வீதி, கொடிகாமம்; விஸ்தீரணம்: 0.2830 ஹெக்டயார்.

**5. துண்டு இல. 5**

காணியின் பெயர்: பண்டாரத்தோட்டம்; விபரம்: தோட்டம்; உரிமையாளர் பெயர்: சின்னத்துரை ஜெயசீலன், பருத்திதுறை வீதி, கொடிகாமம்; விஸ்தீரணம்: 0.0187 ஹெக்டயார்.

**6. துண்டு இல. 6**

காணியின் பெயர்: வேவில்காடு, வேவில் தோட்டம்; விபரம்: ஒரு நிரந்தர கட்டடம் கொண்ட தோட்டம்; உரிமையாளர் பெயர்: சின்னத்துரை ஜெயசீலன், பருத்தி துறை வீதி, கொடிகாமம்; விஸ்தீரணம்: 0.0729 ஹெக்டயார்.

*இவ்வர்த்தமானியை www.documents.gov.lk எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.*

7. **துண்டு இல. 7**

காணியின் பெயர்: பண்டாரத்தோட்டம்; விபரம்: பன்னிரண்டு நிரந்தரக் கட்டடமும், ஒரு பகுதி நிரந்தர கட்டடமும், ஒரு கிணறும் கொண்ட தோட்டம்; உரிமையாளர் பெயர்: சித்திரா பாலசுப்ரமணியம் கச்சாய் வீதி, கொடிகாமம்; விஸ்தீரணம்: 0.8561 ஹெக்டயார்.

மேற்குறித்த காணிக்கு எடுத்துக்கொள்ளவிருக்கும் காணிக்கு உரித்துப்பேசுகின்ற சகலரும் தாமாக அல்லது முறைப்படி எழுத்தில் அதிகாரம் அளிக்கப்பட்ட காரியக் காரர் மூலமாக 2015 ஆம் ஆண்டு கார்த்திகை மாதம் 16 ஆம் திகதி மு.ப. 10.00 மணிக்கு தென்மராட்சி/சாவகச்சேரி பிரதேச செயலகத்தில் என்முன்பாக வெளிப்படுத்தும்படியும் அக்காணியில் மேலும் அவர்களுக்குள்ள உடந்தைகளின் தன்மையையும் குறித்த காணியை எடுத்தற்கான நஷ்டஈடு பற்றிய அவர்களின் கோரிக்கைகள் பற்றிய விபரங்களையும், நஷ்டஈட்டுத் தொகையையும், அத்தொகை கணிக்கப்பட்ட விபரங்களையும் 2015 ஆம் ஆண்டு கார்த்திகை மாதம் 04 ஆம் திகதிக்கு முன்னர் எழுத்தில் முப்பிரதிகளாக எனக்கு அறிவிக்கும்படி இத்தால் கேட்டுக்கொள்ளப்படுகின்றனர்.

விக்ரம் வராகொட,
காணி எடுத்தல் அதிகாரி,
யாழ்ப்பாணம்.

காணி அமைச்சு
மாவட்ட அலுவலகம்
மாவட்டச் செயலகம்,
யாழ்ப்பணம்.
2015, ஒற்றோபர் 13.

11 - 137